## முரசொலி செல்வம் 2ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று!

## முரசொலி வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மலர்மாலை அணிவிக்கிறார்!

### கழகத் தோழர்களுக்கு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வேண்டுகோள்!




முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியின் பணிகளைத் தன் தோளில் சுமந்துகொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற்றியவர் - தலைசிறந்த எழுத்தாளர் - பத்திரிகையாளர் - நூலாசிரியரான இவர், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்த கருத்துரிமைப் போராளி - கழகத்தின் போர்வாளான 'முரசொலி' நாளேட்டின் ஆசிரியராகப் 35 ஆண்டுகளுக்கும் மேலாக பொறுப்பேற்று தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரலாக ஒலித்த முரசொலி செல்வம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு நாளாகிய இன்று (10.11.2026 - சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் "முரசொலி" அலுவலக வளாகத்திலுள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் பொதுச் செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர். பாலு மற்றும் கழக முன்னணியினர் ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக வட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் இந்நிகழ்வில் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

நாள் : 09.10.2026

**நே.சிற்றரசு**
செயலாளர்
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.




### விநாடிக்கு 12,000 கன அடி தண்ணீர் திறக்க வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கை நிராகரிப்பு!

# காவிரியில் 15 நாட்களுக்கு விநாடிக்கு 3,000 கனஅடி நீர் திறக்க வேண்டும்!

### கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு!

*புதுடெல்லி, அக். 10-* காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம், அதன் தலைவர் எஸ்.கே. ஹால்தார் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் காவிரி நதிநீர்ப் பகிர்வுடன் தொடர்புடைய தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநில அரசுகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டின் குறுவை மற்றும் சம்பா சாகுபடிப் பயிர்களைக் காக்கவும், விவசாயிகளின் பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அடுத்த 15 நாட்களுக்கு விநாடிக்கு 12ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனத் தமிழக அதிகாரிகள் வலியுறுத்தினர். ஆனால், கர்நாடக அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லை என அம் மாநில அதிகாரிகள் தெரிவித்தனர். அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட காவிரி மேலாண்மை ஆணையம், விநாடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் 15 நாட்களுக்கு காவிரியில் நீர் திறந்து விடுமாறு உத்தரவிட்டது. காவிரி ஒழுங்காற்று குழுவின் பரிந்துரையை ஏற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதத் தொடக்கத்தில், தென்மேற்கு பருவமழை தீவிரமாக இருந்தபோது கர்நாடக அணைகளில் இருந்து விநாடிக்கு 9 ஆயிரம் முதல் 15 ஆயிரம் கன அடிக்கும் மேல் உபரி நீர் தமிழகத்திற்குத் திறந்துவிடப்பட்டது. ஆனால், தற்போது, தமிழகத்திற்கான காவிரி நீர் குறைக்கப்பட்டுள்ளது.

### சென்னை தரமணி 'டைடல்' பார்க் அருகே

# மெட்ரோ ரயில் பணியால் சாலையில் உருவான ராட்சதப் பள்ளம்!

### பள்ளத்துக்குள் கவிழ்ந்த கார் – 2 பேர் காயம்!

*சென்னை, அக்.10-* திருவான்மியூரில் மெட்ரோ பணி காரணமாக சாலையில் திடீர் பள்ளம் ஏற்பட்டு அவ்வழியே சென்ற கார் கவிழ்ந்தது. நல்வாய்ப்பாக ஓட்டுநர் உயிர் தப்பிய நிலையில், சம்பவம் குறித்து மெட்ரோ நிர்வாகம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

சென்னை திருவான்மியூர் அருகே சாலையில் திடீரென விழுந்த பள்ளத்தில் கார் கவிழ்ந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் விளக்கமளித்துள்ளது.

திருவான்மியூர் டைடல் பார்க் அருகே ஓஎம்ஆர் சாலையில் தற்போது மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பகுதியில் உள்ள சாலையில் இன்று காலை சுமார் 10.45 மணியளவில் திடீரென பள்ளம் ஏற்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ம் கட்டத்தில், 3வது வழித்தடத்திற்காக திருவான்மியூரில் இருந்து தரமணி நோக்கி சுரங்கம் தோண்டும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், திருவான்மியூர் ஷாஃப்ட்டில் இருந்து சுமார் 30 மீட்டர் தொலைவில் இந்த சம்பவம் ஏற்பட்டுள்ளது. அப்போது அந்த வழியாக சென்ற கார் பள்ளத்தில் கவிழ்ந்தது. காரை ஓட்டி வந்தவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

பள்ளத்தில் விழுந்த காரும் மீட்கப்பட்டு ள்ளது. தற்போது பள்ளத்தை கான்கிரீட் மூலம் நிரப்பும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சம்பவ இடத்தில் தேவையான பாதுகாப்பு மற்றும் தளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவம் தொடர்பாக தொழில்நுட்ப ரீதியான ஆய்வும் நடைபெற்று வருகிறது. மெட்ரோ ரயில் பணிகளின் காரணமாக சாலையில் பள்ளம் ஏற்பட்டதாக கூறப்படும் நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



தூத்துக்குடி இம்மானுவேல் சேகரனின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு மாவட்ட திமுக சார்பில் எட்டையாபுரம் சாலையில் உள்ள கலைஞர் அரங்கில் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ சண்முகையா, மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன்செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச்செயலாளர் அன்பழகன், ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்கொடி, சரவணக்குமார், பகுதி செயலாளர்கள் சுரேஷ்குமார், மேகநாதன், ஜெயக்குமார், ஆஸ்கர், சிவக்குமார், ராமகிருஷ்ணன், மாநகராட்சி மண்டலத்தலைவர் வக்கீல் பாலகுருசுவாமி, மாவட்ட அணி நிர்வாகிகள் கவிதாதேவி, அந்தோணிஸ்டாலின், அம்பாசங்கர், அருணாதேவி, நாகராஜன், அருண்குமார், பழனி, கணேஷ்குமார், பொன்னரசு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மும்மொழிக் கொள்கையா ?

# இருமொழிக் கொள்கையா? த.வெ.க. அரசின் நிலைப்பாடு என்ன?

### திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா கேள்வி!

*சென்னை, அக்.10-* திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சத்யா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தித் திணிப்பு குறித்து கேட்டால் எல்லா பூட்டுக்கும் ஒரே சாவி என்பதைப் போன்று எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில் கடந்த ஆட்சி என்று மாக்கியவல்லி அரசியல் கருத்தியலை உள்வாங்கி பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லி வருகிறார்கள். த.வெ.க. அமைச்சர்கள் அதில் ஒன்று அரசு பொது மருத்துவமனையில் நோயாளிகளுக்கு மாத்திரை வைத்து கொடுக்கும் பேப்பர் உறையில் காலை, மதியம், மாலை, இரவு என்று தமிழுக்கு அடுத்து இந்தியும் அடுத்து ஆங்கிலத்திலும் மும்மொழி



யில் அச்சாகி இருப்பது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் அருண் குமாரிடம் கேள்வி எழுப்பினால் எல்லாவற்றுக்கும் காரணம் கடந்த ஐந்தாண்டுகால தி.மு.க. ஆட்சி. முன்னாள் முதலமைச்சர் தலைவர் தளபதியும் அப்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி அவர்களும்தான் காரணம் என்று பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லி உள்ளார்.

மேற்கு மண்டலம் கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய பகுதிகளில் வட இந்தியர்கள் அதிகமாக பணியாற்றுகின்றார்கள். எனவே இந்தி மொழியில் அச்சடிக்கப்பட்டது என்று அரசு தரப்பில் நியாயம் கற்பிப்பார்களேயானால் வட இந்தியாவில் இருந்து பணியாற்றும் தொழிலாளர்கள் பெரும்பாலோர் இந்தி மொழி பேசாத மேற்கு வங்கம், அஸ்ஸாம், மணிப்பூர், மகாராட்டிர, ராஜஸ்தான் ஒரிசா போன்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தாய் மொழியில்தான் பேசுவார்கள். அதிலும் சிலருக்கு இந்தி மொழியை பேசத் தெரியுமே அன்றி படிக்கத் தெரியாது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

தி.மு.க. ஆட்சி முடிந்து த.வெ.க. ஆட்சி 10.05.2026 அன்று பதவி ஏற்று மாதங்கள் ஐந்து உருண்டோடி கொண்டு இருக்கிறது. இந்த ஐந்து மாத காலங்களாக சுகாதாரத் துறையில் என்ன நடக்கிறது என்று ஆய்வு செய்யாமல் கோமா நிலையில் இருந்தாரா சுகாதாரத்துறை அமைச்சர் அருண் குமார் என்று நாட்டு மக்கள் கேட்கிறார்கள். எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி எத்தனைப் பட்டாளம்

கூட்டிவரும் அற்பமென்போம் அந்த இந்திதனை அதன் ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம் வாரீர். என்றும் மறுமலர்ச்சிப் பாதையில்...

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான ராஜா ஈஸ்வரனின் சகோதரரும், தென்காசி நகரமன்றத்தின் 31வது வார்டு உறுப்பினருமான பாலமுருகன் அவர்கள் கடந்த 3ம் தேதி இயற்கை எய்தினார். தென்காசியில் உள்ள அவரது இல்லத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்கண்டேயன் நேரில் சென்று குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.